**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09012024-8049

Volume: 9

Issue: 1

Month: July

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.04.2024

Accepted: 23.06.2024

Published: 01.07.2024

Citation:
Siva Kumar, T., and S. Kavitha. "Life and Culture of Javvadumalai Tribes." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 1, 2024, pp. 26–37.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i1.8049

*Corresponding Author:
skavithatamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Life and Culture of Javvadumalai Tribes

**T. Siva Kumar**
*Researcher, School of Indian Languages and Philology*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

**S. Kavitha**
*Professor and Head, School of Indian Languages and Philology*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

**Abstract**

*The Mountain ranges of Eastern Ghats had been stretched from Vellore district to Ramanathapuram district. It covers an area of 1,52,000 square kilometers. In these regions of Eastern ghats, Erula tribes were residing. Despite them, a majority population of Malayali tribes also inhabited there. A Malayali doesn't mean that they are Malayalam-speaking ethnic group. The social life of the Malayali tribe living in Javvadumalai includes the Vellore and Tiruvannamalai regions. It matches the Sangam literary socio-cultural elements. Their oral literature, rituals from birth to death, faith, customs, food, sacrifices, and worship ceremonies can be used to understand the antiquity of these people. Also, the area of the Javvadumalai tribes has been enriched in archaeological remains. Such as Karttitta, Nadukal, Mudumakal Thazhi, etc. are continuously available in these areas. In particular, the inscription in Nachiyamman temple in Semparai village in Nellivasal Nadu is a Chola-era inscription. Also, the symbol with the image of the Vediyappan deity is found in the village of Nellivasal Nadu. Archaeologists indicate that the stone dates back to the 8th century. In the Sangam literature, Malaipadukadaam had many references to the Sengam region adjacent to Javvadumalai. Therefore, this article explains that the Malayali tribes living in Javvadumalai are the ancient tribes who have lived since the period of Sangam literature.*

***Keywords:*** *Javvadumalai, Vellore, Tiruvannamalai, Malayali, Place and Name, Oral Literature, Sangam Literature, Narratives, Ritual, Food, Belief, Customs, Mesolith, Nadukal, Karttitta, Matriarchal Society, Historical Note*

**References**

1. History of Tamil UP to 600AD New Delhi – 1983 (vep).

# ஜவ்வாதுமலை மலையாளிப் பழங்குடியினர் வாழ்வும் பண்பாடும்

***த. சிவக்குமார்***
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***முனைவர் ச. கவிதா***
பேராசிரியர் தலைவர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*கிழக்குத்தொடர்ச்சி மலைப்பகுதி வேலூர் மாவட்டம் முதல் இராமநாதபுரம் மாவட்டம் வரை நீண்டு 1,52,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இம்மலைத்தொடர்களில் பழங்காலம் முதல் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இருளர், மலையாளிப் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தாலும் பெரும்பாலும் மலையாளிப் பழங்குடியினரே வாழ்ந்து வருகின்றனர். மலையாளி என்பது மலையில் வாழ்பவர்கள் மலையை ஆழ்பவர்கள், என்ற பொருண்மையில் வழங்கப்படுகிறது. ஜவ்வாதுமலை வேலூர் மற்றும் திருவண்ணாமலை பகுதியை உள்ளடக்கியது. இங்கு வாழும் மலையாளிப் பழங்குடியினர் வாழ்வியல் சங்க இலக்கிய வாழ்வியல் கூறுகளுடன் பொருந்தி இருக்கிறது. அம்மக்களின் வாய்மொழி இலக்கியம், பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சடங்கு முறைகளின் வழியாகவும் அதனுடன் நம்பிக்கை, பழக்க வழக்கம், உணவு முறை,பலியிட்டு தெய்வங்களை வழிபாடு செய்யும் முறைமையிலும் விழாக்களின் மூலமும் அம்மக்களின் தொன்மையை அறிந்து கொள்ள முடிகிறது. சோழர் காலத்து கல்வெட்டு நெல்லிவாசல் நாடு என்னும் பகுதியில் உள்ள சேம்பாறை என்கிற கிராமத்தில் நாச்சியம்மன் கோவிலிலுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது. மேலும் நெல்லிவாசல் நாடு மேம்பட்டு கிராமத்தில் வேடியப்பன் தெய்வத்தின் உருவம் பொறித்த சின்னம் காணப்படுகிறது அந்த கல் ௬.ஆம் நூற்றாண்டு என்று தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியமான மலைபடுகடாம் பாடல் முழுவதும் ஜவ்வாதுமலை ஒட்டிய செங்கம் பகுதி பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. ஜவ்வாதுமலையில் வாழும் மலையாளிப் பழங்குடியினர், சங்க இலக்கிய காலம் முதல் வாழ்ந்து வரும் தொல் பழங்குடியினர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *ஜவாதுமலை, வேலூர், திருவண்ணாமலை, மலையாளி , ஊரும் பெயரும், வாய்மொழி, இலக்கியம், சங்க இலக்கியம், வழக்காறுகள், சடங்கு, உணவு, நம்பிக்கை, பழக்க வழக்கம், நடுகற்கள், கல்வெட்டு, கற்திட்டை, தாய்வழி சமூகம், வரலாற்றுக் குறிப்பு.*

**முன்னுரை**

கிழக்குத்தொடர்ச்சி மலையானது மகாநதி பள்ளதாக்கு தொடங்கி, தமிழகத்தில் இராமநாதபுரம் பகுதியில் ஓடும் வைகையாறு வரை நீண்டு' *1,52,000* சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இம்மலைத் தொடர்களில் நீண்டகாலமாகவே பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பெரும்பாலும் மலையாளிப் பழங்குடியினர் வாழ்கிறார்கள். வேலூர் மாவட்டம் தொடங்கி இராமநாதபுரம் மாவட்டம் வரை நீண்டு செல்லும் இதன் தொடர்ச்சியில் பல்வேறு மலைகள் உள்ளன. ஜவ்வாது

மலை, ஏலகிரிமலை, கல்வராயன்மலை, சித்தேரி மலை, சேர்வராயன்மலை, சிட்லிங்மலை, வாச்சாத்திமலை, ஜல்லுத்துமலை, கோதுமலை, கஞ்சமலை, நரகமலை, கூசமலை, பச்சைமலை, பாலமலை, கொல்லிமலை, பழனிமலை, சிறுமலை, கரந்தமலை எனக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் விரிந்து செல்கின்றன. மலையாளிப் பழங்குடிகள் அனைவரும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் தான் வாழ்கிறார்கள். மலையாளி என்னும் சொல் 'மலையை ஆளுதல்' என்னும் பொருளைத் தருகிறது. கேரளத்தில் வாழும் மலையாளிகளுக்கும் தமிழகக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழும் மலையாளிகளுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

காஞ்சிபுரத்தில் தாங்கள் வழிபட்டுவந்த குலதெய்வத்தின் சிலையைத் திருடிச் சென்ற இருளர் இனப் பூசாரிகளிடமிருந்து மீட்பதற்குக் கிளம்பிய மூன்று வேளாள சகோதரர்களில் சின்ன அண்ணன் கொல்லி மலையிலும், நடு அண்ணன் பச்சை மலையிலும், பெரியண்ணன் கல்வராயன் மலையிலும் தங்கிவிட்டனர். இவர்களின் வழி வந்தோரே இன்றைய மலையாளிகள் என்பதை அவர்கள் வழங்கிவரும் இடப்பெயர்ச்சிக் கதை மூலமும் பிற வழக்காறுகளின் மூலமும் அறியமுடிகிறது. மேலும், இவர்களின் இடப்பெயர்ச்சி ஏழு வகையான கதைகளாகக் கூறப்படுவதாக (ஜவ்வாது மலைவாழ் மலையாளிகள் பழங்குடியின மக்களின் வாழ்வும் மொழியும்) ஜே.ஆர்.லட்சுமி தனது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

ஜவ்வாதுமலை என்னும் பகுதி திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில் உள்ளடங்கிய பகுதி ஆகும். ஜவ்வாதுமலையின் பெரும்பாண்மைப் பகுதிகள் திருவாண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இம்மலை, 610 மீட்டலிருந்து 1,070 மீட்டர் உயரம் 3,06,000 ஹெக்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு தேசிய குடிமதிப்பின்படி தமிழகத்தில் மொத்த மக்கள் தொகை 7,21,47.030 (7.2. கோடி). இதில் பழங்குடியினர் எண்ணிக்கை 7,94,697 ஆகும். 2011 ஆம் ஆண்டுக் கணக்குப்படி தமிழக மக்கள் தொகையில் ஏறக்குறைய 1.1% தமிழகப் பழங்குடிகளில் அதிகமான மக்கள் தொகையுடைய பழங்குடிகள்; மலையாளிப் பழங்குடியினர் 3,57,980 பேர் ஆவர். அதற்கு அடுத்தப்படியாக இருளர் பழங்குடியினர் 1,89,661 வாழ்ந்து வருகின்றனர் ( பக்தவத்சல பாரதி) தமிழகப் பழங்குடிகள் ப - 70.

ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியத்தில் 51,999 பேர் வாழ்ந்துவருகின்றனர். இதில் பட்டியல் சமூகத்தினர் (SC) 1071 ஆக உள்ளனர். பட்டியல் பழங்குடியினர் (ST) 49,081 ஆகவும் பிற சமுதாய மக்கள் 1847 பேர் வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தென்னிந்தியாவில் கற்கால வாழ்க்கை முறைகளை விளக்கும் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. பெரும்பாலும் பல இடங்களில் இடைக் கற்காலத்தைச் சேர்ந்த படிமங்கள் அகழாய்வில் கிடைத்துள்ளன. ஜவ்வாது மலைத்தொடர்களில் கிடைத்த தொல்படிமங்கள் வழி அறியலாகும் சங்ககால வாழ்வியல் கூறுகளின் தொடர்ச்சியாக அம்மலை மக்களின் தற்போதைய வாழ்வியல் உள்ளது என்பதை நிறுவுவதாக இவ்ஆய்வு அமைகின்றது.

## ஜவ்வாதுமலை பழங்குடி - ஊரும் பெயரும்

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாதுமலை பழங்குடிமக்கள் வாழும் ஊர் பெயர்கள் காரணகாரிய அடிப்படையிலும் இடுகுறி தன்மையிலும் அமைந்துள்ளன. மரம், நீர், பாறை, விலங்கு முதலியனவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. மரத்தின் பெயரிலான ஊர்களாக ஜமனாமரத்தூர், பலாமரத்தூர், எட்டிமரத்தூர், குல்லாமரத்தூர், சேராமரத்தூர், விளாங்குமரத்தூர், வாழைத்தொம்பை, பாக்குமுடையனூர்

ஆகிய ஊர்ப் பெயர்கள் மரத்தின் பெயர்களைக் கொண்டு அமைந்துள்ளன. விலங்கின் பெயரிலான ஊர்ப் பெயர்களும் உள்ளன. புலியூர், விளாமுச்சூர், எருமையனூர், கல்யானைமந்தை முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. கோமுட்டேரி, கூத்தனேரி, ஏரிமரத்தூர், ஏரிதெல்லாமரத்தூர், கூட்டாத்தூர், கல்லாத்தூர், ஓடமங்கலம், ஆத்துக்கானூர், மந்தார்குட்டை என்பன போன்ற நீர்நிலை அடிப்படையிலான பெயர்களும் உள்ளன. பாறையை அடிப்படையாக கொண்டு வழங்கப்பெறும் பெயர்கள் பாறையடியூர், கள்ளிப்பாறை, மண்டப்பாறை என வழக்கில் இருக்கின்றன. மலை குறித்தான ஊர்ப் பெயர்களும் வழக்கில் உள்ளன. நச்சாமலை, கானமலை தென்மலை, மோட்டூர் முதலான ஊர்கள் மலையைப் பெயர்களில் கொண்டு அமைந்திருக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஊர்ப் பெயர்களின் வாயிலாக சங்க காலத்தில் வழங்கப்பட்ட பல ஊர்ப்பெயர்கள் இன்றும் வழக்கத்தில் உள்ளன என்பது புலப்படுகிறது. புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு, புதூர்நாடு, காணமலைநாடு, கோம்பை என்பன போன்ற மிகவும் பழமை வாய்ந்த ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் நாடு என்னும் சொல் 163 இடங்களில் ஆளப்பட்டுள்ளது இச்சொல் எல்லை என்னும் பொருளிலும் வழங்கப்படுகிறது. (கோ.சதிஸ் 2021:13).

## வாய்மொழி இலக்கிய வழக்காறுகள்

நாட்டுப்புற வழக்காறுகள் மக்களின் வாய்மொழிகளாகப் பலதலைமுறைகள் வழங்கிவையாக இருக்கவேண்டும் என்கிறார் ரிச்சர்ட் எம்.தர்சன். எழுதப் பெற்ற இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி எனலாம் (சு. சக்திவேல்) நாட்டுப்புற இயல் ஆய்வு ப.22). இவை ஆசிரியர் இல்லாமல் ஒருவித வாய்பாட்டில் அமைவன என்று நாட்டார் ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஜவ்வாதுமலை பழங்குடிகள் காலந்தோறும் பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு வகையிலும் இசை, கூத்து, ஆடல், பாடல் என்ற அனைத்தும் அவர்கள் வாழ்வியலோடு கலந்து இருப்பது புலனாகிறது. அந்த வகையில் கதைப்பாடல் தனிப்பாடல், குழுப்பாடல், பழமொழி, விடுகதை, சடங்குப் பாடல் அவர்தம் வாழ்வியல் சூழலோடு கலந்து வழங்கிவருகின்றன.

**வேட்டைக்காரன் வீட்டிலும்**
**ஆட்டக்காரன் வீட்டிலும்**
**குடிக்கத் தண்ணீர்கூட இருக்காது**
**ஆட்டக்காரன் புழுகு**
**சபைக்கு போனால் தெரியும்**
**வேட்டைக்காரன் புழுகு**
**காட்டுக்கு போனால் தெரியும்**

***(கோவிந்தராஜ் 2021:38)***

திருவண்ணாமலை மாவட்ட மக்களின் வாழ்வியலில் கூத்துக்கலை முக்கியமான ஒன்றாக உள்ளது. அதுபோல ஜவ்வாதுமலை பழங்குடிகளிடத்தும் கூத்து முதன்மையான ஒன்றாக உள்ளது. கூத்துக்கலைஞர்களின் வறுமையை மறைத்து வேடம் புனைந்து கூத்தாடும் நிலையை எடுத்துக் கூறுவதாக மேற்கண்ட பழமொழி அமைகின்றது.

**ஆலமரத்துப் பேய் ஆளைக்கண்டு மிரட்டும்**
**புளியமரத்துப் பேய் பிள்ளையைக் கண்டு மிரட்டும்**

***(கோவிந்தராஜ் 2021:39)***

மலைசார்ந்த பகுதிகளில் ஆலமரம், புளியமரம் என்பன முதன்மையான மரங்கள், அவற்றில் பேய் இருப்பதாக ஒரு நம்பிக்கைப் பன்னெடுங்காலமாக வழக்கத்தில் இருக்கும் ஒன்றாக மேற்காணும் பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

**ஜன்னல் பின்னாடி கொடி**
**ஜாதி என்ன கொடி**
**எண்ணெய்படாத கொடி**
**அது என்ன ?**
**விடை: பாம்பு (கோவிந்தராஜ் 2021:39)**
**நடுகாட்டில்**
**ஒரு காரிமாடு கன்று போட்டுள்ளது**
**அது யாரையும் நெருங்கவிடவில்லை**

***அது என்ன ?***

***விடை: கதண்டு (கோவிந்தராஜ் 2021:41)***

ஜவ்வாதுமலை இயற்கை எழில் மிகுந்த பகுதி அங்கு, பாம்பு, கதண்டு (ஒருவித தேனீ) போன்றவை ஆபத்தான பூச்சியினமாகக் கருதப்படுகிறது. அந்தவகையில் மேற்காணும் விடுகதை மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வின் எச்சமாக அமைந்திருப்பதை அறியமுடிகிறது.

பல்வேறு படிநிலைகளில் இந்தப் பகுதியில் நடைபெறும் சடங்குகள், விழாக்களிலும் கதைப்பாடல், பொழுதுபோக்குப் பாடல், உரையாடல் பாடல், விளையாட்டுப் பாடல்களிலும் தங்களை இணைத்துக் கொண்டு, அவ்வழக்காறுகளின் வழி தங்கள் வாழ்வியலை வெளிப்படுத்திக்கொண்டு, பல்வேறு நிகழ்வுகளின் வாயிலாகத் தொன்மை மாறாமல் பண்பாட்டு மரபியலுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்தவகையில் திருமண விழாவின் போது பாடப்படும் பாடல் மிகவும் புகழ் பெற்றது.

***மூங்கில் மரம் பிளந்து***
***மூர்த்தகால் நட்டார்கள்***
***வாழை மரம் பிளந்து***
***வாசலெல்லாம் பந்தகா இட்டாக***
***இட்டள்கள் பந்தலை***
***எண்ணூறு காதவழி***
***தொடுத்தார் பந்தலை தொண்ணூர் காதவழி***
***பந்தகால் அலங்கரித்து***
***பந்தக்கால் செப்பனிட்டு***
***முக்காதம் பந்தலிட்டார்***
***தென்னைமரம் பிளந்து***
***தெருவெல்லாம் பந்தலிட்டார்***
***மாங்கொத்து தோரணமும்***
***வாழை மரம்தானும் பிளந்து***
***வாசலெல்லாம் பந்தலிட்டார்***

***(கோவிந்தராஜ் 2021:42)***

மணவிழா, மணமேடை அலங்காரம் மலைப்பகுதி வாழ்வியல் சூழலை விளக்கும் வகையில் அந்தப்பகுதிகளில் கிடைக்கப்பெறும் சிறப்பான மா, பலா, வாழை, தென்னை, மூங்கில் ஆகிய மரத்தால் அலங்கரிக்கப்பட்டு மணவிழா நடைபெற்றதாக மேற்கண்ட பாடல் வழி அறியமுடிகிறது.

***உழுந்து தலைப்பெய்த கொழுங்கனி மிதவை***
***பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரை கால்***
***. . . . (அகம்., பாடல் -86,***
***நல்லாவூர்கிழார்)***

தலைவன் தோழியிடம் சொல்வதாக அகநானூற்று மருதத்திணை “திருமணத்தில் பலவகையான உணவு, மணப்பந்தல் அமைப்பு, உரோகிணி என்னும் நாளில் மணமுடித்து பெரிய மனைக்கிழத்தி ஆவாயாக நீ” என்று வாழ்த்தினார் என்று சங்கப் பாடல் உணர்த்துகிறது. மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு, வரையா வண்மையோடு புரையோர்ப் பேணிப் அகம் - 136 ஆம் பாடல் திருமண விழா குறித்த செய்தியை எடுத்து இயம்புவதை எட்டுத்தொகை அகநானூறு பாடல்வழி அறியமுடிகிறது. பழங்குடி மக்கள் மணவிழா மேற்கண்ட சங்கப்பாடல் வழி மணவிழாக் காட்சி, தொல்பழமை வாய்ந்த திருமணச் சடங்குமுறை இருந்துள்ளதும் அது இன்று வரை பழங்குடி மக்களின் பயன்பாட்டிலும் சங்ககால வாழ்க்கையின் எச்சமாக இருப்பதையும் காணமுடிகிறது.

**வழிபாடும் சடங்கும்**

உலகச் சமுதாயத்தில் மனித இனம் நாகரிகத்தைக் கட்டமைப்பதற்கு முன்பு நாடோடிச் சமுதாயமாக இருந்தது. உணவுக்காகவும் பிற தேவைக்காவும் தங்களைக் காத்துக்கொள்வதற்குப் பெறும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் வேட்டையை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். பின் அதுவே வழிபாடாக மாறி இன்று தொல் குடி வாழ்வியலின் எச்சமாக இருந்து வருகின்றது.

ஜவ்வாதுமலை மலையாளிப் பழங்குடினர் வாழும் 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் வேட்டைத் தெய்வமாக வேந்தியப்பன்,

வேடியப்பன் ஆகிய தெய்வங்களைத் தம் வழிபாட்டுத் தெய்வமாக வணங்கி வருகின்றனர். வேட்டையாடிக் கொண்டுவரும் விலங்குகளை வேந்தியப்பன், வேடியப்பன் முதலான தங்கள் குல தெய்வங்களின் முன்பு படையலிட்டு வழிபாடு நடத்துவது முன்புவரை வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. 50 ஆண்டுகள் வரை ஜவ்வாதுமலைப் பகுதியில் வேட்டைத் தொழில் வழக்கத்தில் இருந்திருக்கிறது. முதன்மையான வேட்டைப் பொருளாகப் பன்றி இருந்திருக்கிறது. வன உயிர் பதுகாப்புச் சட்டம் (wildlife protection act, 1972) நடைமுறைப்படுத்தப்பட்டபின் வேட்டையாடுவது கைவிடப்பட்டு ஆடுவெட்டியும், வளர்ப்புப் பன்றியைப் பலிகொடுத்தும் தங்களின் வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர்.

**ஜவ்வாதுமலை பழங்குடி மக்களின் உணவுமுறை**

தொன்மை இலக்கியமான சங்க இலக்கியப் பாடல்களில் உணவுமுறைக் குறித்து பல்வேறுக் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாகப் பத்துப்பாட்டு நூல்களில் உணவுக் குறிப்புகளும், விருந்தோம்பல் பண்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பன்றி மற்றும் அதன் இறைச்சி என்பது முக்கிய இடம் வகிக்கிறது. மலையாளிப் பழங்குடி உணவில் அதுவும் சடங்கு, கோவில் விழா, கருமாதி போன்ற நிகழ்வுகளுக்கும் திருமண விழா மற்றும் குலதெய்வத்திற்கும் நேர்த்திக்கடன் கொழுத்த பன்றி இறைச்சி மற்றும் பன்றி பலியிடுதல் என்பது முதன்மையான ஒன்றாக இருக்கிறது. ஏதேனும் வேண்டுதல் குடும்ப விழா என்று எதுவாக இருந்தாலும் உற்றார் உறவினர்களுடன் பன்றி இறைச்சியை உணவாக உட்கொள்கின்றனர்.

சங்க இலக்கியங்களில் பன்றி இறைச்சி பற்றிய குறிப்புகள் நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு மற்றும் மலைப்படுகடாம் உள்ளிட்ட நூல்களில் காணப்படுகின்றன.

> **தினையுடன் கேழல் இரியப் புனவன்**
> **சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்**
> **ஓண்கேழ் வயப்புலி படூஉம் நாடன்**
> ***(நற்றி.119:1– 3)***

மேற்கண்ட நற்றிணையில் உள்ள இப்பாடல் தினையை உண்ண வரும் கேழல் பன்றிகள் (காட்டுப் பன்றி) அவற்றை பிடிப்பதற்காக பெருங்கல் அடார் என்னும் பொறியை வைத்திருப்பான் அவை இன்று கண்ணிப்பொறி என்று வழங்கப்படுகிறது. அத்தகைய அடார் என்னும் பொறியில் சிலநேரம் வலிமைமிக்க புலியும் மாட்டிக் கொள்வதாக இந்த நற்றிணைப் பாடல் விளக்குகிறது.

> **வரைஅர மகளிர் இருக்கை காணிலும்**
> **உயர்செல வெம்பிப் பணித்தாலும் உரியிர்**
> **பலநாள் நில்லாது நிலநாடு படர்பின்**
> **புழைதொறும் மாட்டிய இருங்க அருள்பொறி**
> ***(மலை.190 – 194)***

விளைச்சலைப் பாலாக்கும் காட்டுப் பன்றியை அழிப்பதற்காக ஆங்காங்கே கானவர் பொறி வைத்திருப்பர். பொறியில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கி சாய்த்து, கவட்டைக் கோலில் குச்சியை நிறுத்தி அந்த குச்சியின் ஒரு முனையில் சார்ந்திருக்கும் கல்லை நிறுத்தி மற்றொரு முனையில் கயிறு கட்டி வைத்திருப்பர் அதில் பன்றி விரும்பி உண்ணும் உணவை பொறியில் வைத் திருப்பர். உண்ணவரும் பன்றி பொறியில் இருந்து வரும் பெரிய கல் விழுந்து இறந்து போகும். அவ்வாறு இரவில் செல்லும் போது பொறியில் அறியாமல் மோதுவதினால் பாறாங்கல் விழுந்து துன்புற நேரும் எனவே இருள் நீங்கி விடிந்தபின் செல்லுங்கள் என்று மலைப்படுகடாம் பாடல் அடி விளக்குகிறது.

மலையும் மலை சார்ந்த பகுதியாக ஜவ்வாதுமலைவிளங்குகிறது. இம்மலையில் வாழும் மக்களின் அனைத்துச் சடங்கு நிகழ்வுகளிலும் பன்றி இறைச்சி முக்கிய அங்கம் வகிக்கின்றது. திருமணத்தில் பன்றி இறைச்சி முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

மலை நிலத்தில் விளையும் தானியங்களைக் கொடுத்து திருமணம் நிச்சயிக்கும் வழக்கம் இருந்துள்ளது. அந்தவகையில் மணமகன் வீட்டார் பெண்பார்க்க மணமகள் வீட்டிற்குப் பரிசம் போடச் செல்லுகின்றனர். அவ்வாறு செல்லும் போது கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர் உடன் சென்றிருப்பர் அவர்களுக்கு மணமகள் வீட்டார் பன்றிக்கறி விருந்து உபசரிக்கின்றனர்.

வைதிகமுறைக்கு அப்பாற்பட்டு அவ்வூரில் வாழ்ந்து அனுபவமுள்ள பெரியோர்கள் முன்னிலையில் தாலிகட்டும் முறை காணப்படுகின்றது. ஊர் மக்கள் முன்நின்று திருமணத்தை நடத்திக் கொடுப்பதால் அவர்களுக்கு நன்றிக் கடனாக அவ்வாண்டு நிகழும் மாரியம்மன் திருவிழாவிற்கு அம்மனுக்குப் பலிகொடுக்க மணமக்கள் இருவர் வீட்டடிலிருந்தும் பன்றி வளர்த்துக் கொடுக்கப்படுகின்றது. தற்போது நாகரிக வளர்ச்சி எட்டிய நிலையில் சிலர் உடன் போக்கில் திருமணம் செய்துகொள்கின்றனர். அதனால் பன்றி வளர்த்துக்கொடுப்பதற்குப் பதிலாக ஐம்பதாயிரம் பணமாக ஊர்ப் பொதுக் கணக்கிற்குக் கொடுக்கவேண்டும் என்ற ஊர் வரிவிதிப்பு நிலைப்பாடு உருவாகியுள்ளது. தொலக்கறி என்னும் முறை வழக்கில் இருக்கிறது. மாரியம்மனுக்குப் பலிகொடுத்த பன்றியின் தலை, மற்றும் அள்ளைப் பகுதிகளை வெட்டி எடுத்து உப்பு, மிளகாய் அரைத்து, கோவில் அருகிலே சமைத்து உண்ணுகின்றனர் இதனைத் தொலக்கறி என்பர்.

காரிய சடங்கில் பன்றி இறைச்சி என்பது முதன்மையான ஒன்றாக இருக்கிறது. தீட்டினைக் கழிப்பதற்குத் தருமபுரி மாவட்டம் அரூர் அருகில் அமைந்துள்ள தீர்த்த மலைக்குச் சென்று நீராடிய பிறகு தங்கள் வீட்டிற்கு செல்கின்றனர். வீட்டை தூய்மைப்படுத்தி அதிக அளவிலான சோறாக்கி பன்றிக்கறியுடன் நடுவீட்டில் படைக்கின்றனர். மலைக்கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை அழைத்து, பன்றிக்கறி உணவைப் பரிமாறுகின்றனர்.

மலைப் பகுதிகளில் செய்யப்படும் மலை விவசாயமுறை என்பது சமவெளிப் பகுதியில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். மலைப்பகுதியில் படிக்கட்டு அமைப்பில் சிறிய அளவில் நிலப்பரப்பைச் சமன்படுத்தி தினை, கோரை, சாமை, மலைநெல் முதலான விதைகளை விதைக்கின்றனர். அவ்வாறு விதைத்த விதைகள் பயிர்களாக வளர்ந்து நல்ல விளைச்சலைத் தரவேண்டும் என்று நிலதெய்வமாகக்கருதுகின்ற முனிஸ்வரனை வேண்டி பன்றியைப் பலிகொடுத்து அதன் கறிகளை உற்றார் உறவுகளுக்குக் கொடுத்து, உண்டு மகிழ்கின்றனர்.

## மருத்துவத்தில் பன்றி இறைச்சி

மருத்துவத்தில் பன்றி மிக முக்கியமான அங்கம் வகிக்கின்றது. காதுவலி, கண்வலி ஏற்படுகின்ற போது பன்றியில் சிறுநீரை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். பன்றி அறுக்கும் போது வடியும் நெய்யை (கொழுப்பை) சேமித்து கண், காதுவலி ஏற்படுகின்ற போது மருந்தாக பயன்படுத்துகின்றனர். மனித உடலுக்குக் குளிர்சியும், மூலநோயை குணப்படுத்தும் சிறப்பையும் பெற்றுள்ளதாக பி.சி கணேசன் எழுதிய விலங்குகளின் வாழ்வியல் என்கின்ற நூலின் வாயிலாக அறியமுடிகின்றது. உணவு முறை இடத்திற்கு இடம், சூழலுக்கு ஏற்ப மாறுபட்டாலும் ஐவ்வாதுமலை பழங்குடி மக்களிடம் தொன்மை சார்ந்த உணவு முறைகளில் ஒன்றான பன்றி இறைச்சி இன்றும் வழக்கத்தில் இருப்பதைக் கள ஆய்வின் வழி அறியமுடிகிறது.

## பொங்கல் விழா

தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் பொங்கல் விழா சிறப்புப் பெற்ற விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆயினும் சங்கப் பாடல்களில் பொங்கல் விழாப்பற்றிய

குறிப்புகள் இல்லை. ஆனால் மலையாளிப் பழங்குடிகளிடம் பொங்கல் விழா ஏழு நாட்கள் முதல் ஒன்பது நாட்கள் வரை விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பட்டிப்பொங்கல் என்றும் வெகுவிமர்சையாக ஊர் மந்தையில் ஊரிலுள்ள அனைத்து மாடுகளையும் அழைத்து, பொங்கல் வைத்து, வழிபடுகின்ற மரபு இன்றளவும் அவர்களிடையே காணப்படுகிறது.

நடுகற்களுக்கு பொங்கல் வைத்து வழிபாடு நடத்துகின்றனர். ஒவ்வொரு வீட்டின் தோட்டப் பகுதியில் உள்ள பலாமரத்து அடியில் இறந்துபோன முன்னோர்களுக்கு நடுகல் வைத்திருக்கின்றனர். பொங்கல் விழாவின் அங்கமாக அந்த நடுகல்லிற்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். சங்க இலக்கியமான அகநானூற்றில் நடுகல் வழிபாட்டுக் குறிப்பும் இடம்பெறுகிறது.

**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**
***(அகம். 131:10 -11)***

மலைப்படுகடாம் என்னும் ஆற்றுப்படை நூலில் ஒருபாணர் மற்றொரு பாணனிடம் அரசனைக்கண்டு பரிசில் பெற ஆற்றுப்படுத்துவான். அதில் வழிநெடுக நடுகல் இருக்கும் என்னும் அடையாளத்தைக் கூறி வழி கூறுவர்.

**ஒன்னார் தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென**
**நல் வழி கொடுத்த நாண் உடை மறவர்**
**செல்லா நல் இசை பெயரொடு நட்ட**
**கல் ஏசு கவலை எண்ணு மிகப் பலவே**
**இன்பு உறு முரற்கை நும் பாட்டு விருப்பு ஆக..**
***(386- 390)***

புகழுடைய பெயர்களோடு நடுகற்கள் பல உண்டு, வளைந்த பாதையில் உங்களுடைய பாட்டு இன்பத்தைத் தரும்வகையில் தாளத்தோடு பாடுங்கள், தொன்று தொட்டு வழங்கும் மரபு முறைப்படி உங்கள் யாழை இயக்கி, நடுகற்களை வணங்கிவிட்டு நீங்கள் செல்லுங்கள் என்கின்றது பாடல். இங்கே நடுகல் வழிபாடு என்பது பிற்காலக் காவல் தெய்வங்கள் உருவாக ஆரம்பமாக எடுத்துக்கொள்ளலாம்.

நெல்லிவாசல் என்கிற ஜவ்வாதுமலை கிராமத்தில் உருவத்துடன் கூடிய நடுகல் உள்ளது. அதற்குப் பட்டிப்பொங்கல் அன்று பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். இவை வரலாற்று எச்சமாக விளங்குகிறது. எருது பிடித்தல், எருது பொளித்தல், அம்மனுப்புதல், நரியாட்டம் என்று பொங்கல் விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. ஜவ்வாது மலைப் பழங்குடிக்கே உரிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. பொங்கல் விழா நிறைவாகத் திட்டிக் கழிக்கும் நிகழ்வும், பன்றி குத்தும் நிகழ்வும் நடைபெற்று விழா நிறைவு பெறுகிறது.

### சடங்கு முறை

மலையாளிப் பழங்குடி மக்களிடம் பெண்குழந்தை பிறப்பதால் செல்வம் சேரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. அதனாலேயே குலதெய்வமாக நாச்சியம்மாள், காளியம்மாள், திக்கியம்மன், பலினியம்மன் முதலான தெய்வங்களைக் குலதெய்வங்களாக வழிபடுகின்றனர். தங்கள் வீட்டில் பிறக்கும் பெண் பிள்ளைகளுக்கு மேற்கண்ட தெய்வத்தின் பெயர்களைச் சூட்டி மரபைப் பேணுகின்றனர். இன்றும் அவ்வழக்கம் பெண்களின் பெயர்களாக சூட்டப்பட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

பூப்புநிலை, உணவுமுறை, வீட்டிற்கு அழைத்தல், தாய்மாமன் சீர், பொலக்குறிச்சி (மாதவிடாய் காலத்தில் தங்கும் குடிசை) திருமணம், சேவைதிருமணம் (உடன்போக்கில் திருமணம்) பரிசம், மறுமணம் என்று பன்னெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் சடங்குமுறை இன்று பழங்குடி மக்களிடம் அழிந்து வருகிறது.

ஜவ்வாதுமலை மலையாளிப் பழங்குடிப் பெண்களின் வாழ்வியல் நிலை என்பது பாகுபாடின்றி சமத்துவமாக வாழும் சூழல் அமைந்திருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒத்த வயது

வந்தவர்களை மட்டுமே மணமக்களாகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆண், பெண் மறுமண வாழ்வு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சேவை திருமணம் என்ற முறை பொருளாதார சூழல் கருதி உடன்போக்குத் திருமணம் அங்கீகரிக்கப்படுகிறது. பெற்றோர் சம்மதமின்றி திருமணம் நடந்ததாலும் ஊர் பெரியவர்கள் வழி அந்த மணமுறையை அங்கீகரித்துப் புரியவைக்கின்றனர்.

**வரலாற்று எச்சங்கள்**

கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு முக்கிய வரலாற்று ஆவணமாக ஜவ்வாது மலை இருந்து வருகின்றது. தென் இந்தியாவில் தொடர்ச்சியான ஒரு வாழ்வியல் போக்கு இருந்துள்ளதை உறுதிப்படுத்துகிறார். இராபர் ஃபூட் தனது இந்தியப் பங்களிப்புகளை நினைவுக் குறிப்புகளாக எழுதி 12 பாகங்களாக வெளியிட்டார். இந்திய நிலவியல் ஆய்வுக் கழகம் 'Geological Features of the South Mahratta Country and Adjacent Districts'' (மகாராட்டிரம், கருநாடகம், ஆந்திரப்பிரதேச மாநிலங்கள்) என்ற தலைப்பில் 1876 ஆம் ஆண்டில் வெளியிட்டது (14). இராபட் புருஸ் ஃபூட் தென்னிந்தியாவில் பழைய கற்காலம் நிலவியதற்கான சான்றுகளை நிறுவியுள்ளார். அதனைத் தொடர்ந்து ஜவ்வாதுமலைப் பகுதியில் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு மானிடவியல் பின்னணியில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். தொல் எச்சங்கள் விரவி காணப்படும் பகுதியாக இருப்பதால் வரலாற்று நிலையில் இருந்து சமுதாய பண்பாட்டு மானிடவியல் (Socio & Cultural Anthropology) பின்னணியில் ஆராயப்பட வேண்டிய தேவையுள்ளது.

ஜவ்வாதுமலை கிராமங்கள் கல்திட்டை, முதுமக்கள் தாழி, நடுகற்கள், எல்லைக்கல், காவல் தெய்வங்கள், கல்வெட்டுகள் என்று தொல்லியல் எச்சங்கள் நிறைந்த பகுதியாக விளங்குகிறது. கீழச்செப்பிலி, மேல்செப்பிலி, பட்றகாடு, கோம்பை, கம்புகுடி பகுதிகளில் பழங்கால மக்கள் பயன்படுத்திய கல்திட்டை பல காணப்படுகின்றன. முதுமக்கள்தாழி, புங்கம்பட்டுநாடு பகுதியிலும் கல்லாவூர் கிராமத்திலும் காணப்படுகிறது. நடுகல் ஏராளமாக உள்ளன. இன்றும் நடுகல் வழிபாடு ஊர் எல்லைப் பகுதியில் இருக்கிறது.

நெல்லிவாசல்நாடு மேம்பட்டு கிராமத்தில் வேடியப்பன் என்கிற தெய்வத்தின் உருவம் கி.பி. 8 – ஆம் நூற்றாண்டு என்று தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

புதூர்நாடு அடுத்த கீழூர் கிராமத்தில் வேந்தியப்பன் கோவிலில் வில் வாளுடன் கூடிய உருவம் பொறித்த நடுகல், வழிபாட்டில் இருக்கிறது. மலைகிராமங்களில் உள்ள குலதெய்வங்களுக்கு அருகிலே வேட்டை தெய்வங்கள் நடுகல்லாகவே உள்ளன. மலைப்பகுதியில் வேடன் சிலை, சின்னான் சிலை, ஊர்காவலின் பொருட்டு எல்லைக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

ஜவ்வாதுமலையில் பல இடங்களில் கல்வெட்டு காணப்படுகின்றது. குறிப்பாக புதூர்நாடு, மொழலை, சேம்பாறை இடங்களில் கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் ஒன்றான மலைப்படு கடாம் (கூத்தறாற்றுப்படை) என்கிற நூல் நன்னன் சேய்நன்னனை குறுநில மன்னன் செங்கன்மாவை (இன்றைய செங்கம்) தலைநகரமாகக் கொண்டு சேய்யாற்றங்கரையில் அரசாண்டான் என்றும் அவருடைய மலை நவிரமலை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர் காலத்துக் கல்வெட்டு நெல்லிவாசல் நாட்டில் உள்ள சேம்பாறை என்கிற கிராமத்தில் நாச்சியம்மன் கோவிலில் உள்ளது. அங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டு வாசகம்,

**ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்து**
**ங்கசோழ தேவற்குயா**
**ண்டு 49 ஆவது ஐயங்**
**கொண்ட சோழமண்டல**
**த்துபங்கள நாட்டு தெற்கில்**
**வகைமேல் வேழநாட்டு**
**நவிரமலை புனா நாடுடையன்**

***உடையான் மாதன் மகனான***
***தனாநவீ சோழ நவிரமலை***

*.... எனக் அக்கல்வெட்டுச் செய்தி உள்ளது.*

*ஜவ்வாதுமலைப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுச் சிற்பங்களும், நடுகற்களும், தொல்பழங்கால மக்களின் வாழ்வியல் கூறுகளைக் காட்டுகிறது. அம்மலைப் பகுதியில் கிடைக்கப்பெறும் வரலாற்று எச்சங்கள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. இம்மலையில் கிடைக்கப்பெறும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் பலவும் உலகம் முழுவதும் உள்ள பெருங்கற்கால சின்னங்களுடன் ஒத்துப் போகின்றன.*

*மலை மக்கள் வாழ்வியலையும், பாணர் வாழ்வியலையும் மலைப்படுகடாம் விரிவாக சித்தரிக்கிறது. மலைபடுகடாம் பண்டைய கால இசை கருவிகள் குறித்து மிகுதியாக விளக்கும் நூல், ஆற்றுப்படை நூல்களுள் மிகவும் பெரிய நூல் மொத்த அடிகள் **583** ஆகும். பல் குன்றக் கோட்டத்து செங்கனண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்பவரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. இதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் என்பவராவர். நவிரமலை வேலூர் மற்றும் திருவண்ணாமலைக்கு இடையில் உள்ளது. அம்மலையே ஜவ்வாதுமலை என்பதற்கு குறிப்புகள் கிடைக்கின்றன.*

*ஜவ்வாதுமலை மலையாளிகள் காஞ்சிபுரத்தில் இருந்து வந்தவர்களாக இருக்கக்கூடும் என்று எட்கர் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார். சென்னை அரசு அருங்காட்சியராக பொறுப்பேற்று **1885** முதல் தொகுத்த செய்திகள் தென்னிந்திய குறிப்புகள் **1907** என்னும் இரண்டு தொகுதிகளாகவும், அதன் பின்னர் தென்னிந்திய சாதிகளும் பழங் குடிகளும் **1909** எனும் **7** தொகுதிகளும் அடங்கிய நூல் விளக்குகிறது.*

*மேற்கண்ட தர்ஸ்டன் ஆய்வு குறிப்புகள் பிற்கால இன வரலாறாக இருக்கும் என்கிறார். முனைவர் பக்தவத்சல பாரதி அதற்கு யு.ஆர். எரன் ஃபெல்ஸ் தாய்வழிச் சமூக ஆய்வை (**1943**) முன்வைத்து தர்ஸ்டன் ஆய்வை முற்றாக மறுக்கிறார். மலையாளிப் பழங்குடிகளிடம் நடத்திய ஆய்வில் தாய்வழிச் சமூகத்தை காட்டும் எச்சம் இருப்பதை மேற்கோள்காட்டுகிறார். மலையாளிப் பழங்குடிகள் (ஜவ்வாது மலை மக்களின் வாழ்வியல்) நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.*

*ந.சி. கந்தையா எழுதிய தென்னிந்திய குடிகளும் குலங்களும் என்னும் நூலில் தர்ஸ்டன் கள ஆய்வு முற்றிலும் உண்மையென கொள்ள இயலாது என்கிறார். **1999** - முதல் பதிப்பு சங்ககால வேடர், குறவர்களோடு இடைக்கால வேளாளர்கள் இம்மலைக்கு இடம்பெயர்ந்து கலந்துவிட்டனர். முகமதியர் ஆட்சிகாலத்தில் இத்தகைய இடம்பெயர்வு நடைபெற்றுள்ளதை ந.சி. கந்தையா குறிப்பிடுகிறார். இன்றும் அம்மலையில் உள்ள போக்குவரத்து வசதி கொண்ட பகுதிகளில் வணிக வளாகம், துணிக்கடை, நகைக்கடை முதலியவை விரவி காணப்படுவதால் இடைக்காலத்தில் இடப்பெயர்வு நடைபெற்றதைக் கள ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.*

### ***ஜவ்வாதுமலை - தாய்வழிச் சமூக அமைப்பு***

*மலையாளிப் பழங்குடிகளிடம் தாய்வழி சமூக அமைப்பு காணப்படுகிறது. தாய்வழி மரபில் தோன்றிய குலப்பிரிவுகள் ஒவ்வொரு ஊரிலும் காணப்படுகின்றன. சான்றாகப் புதூர்நாடு மலைப்பகுதியில் உள்ள கீழூர் கிராமத்தில் கீழூரான் மேலூரான் வீடுகள் ஒரே குடியில் பிரிந்த கிளைகளாக உள்ளன. வேந்தியப்பன் இவர்களின் குல தெய்வமாகும். கீழூர் மற்றும் மேலூர் கிராமங்களில் புலியூரான், கோமியான், நெலேயான், மொல்லையான், புதூரான், வழுதலாம்பட்டான் குலப்பிரிவுகள்*

காணப்படுகின்றன. இத்தகைய குழுவிற்குள்ளாக மட்டுமே திருமணம் செய்து கொள்கின்றனர்.

## முடிவுரை

சங்ககாலம் முதல் ஜவ்வாதுமலையில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்ற பழமையை வாய்மொழிப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. அப்போது குறவர், வேடர் என்று அழைக்கப்பட்டவர்கள் இன்று வேடமூட்டார் (வேடன்) குறவமூட்டார் (குறவர்) என அழைக்கப்படுவது அவர்களின் குடிப்பிரிவுகள் வழி நமக்கு உணர்த்துகின்றன.

திருமண அமைப்பு சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் அமைப்பினைப் போல காணப்படுகின்றது. உடன்போக்கு, மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டிற்கு தானியங்கள் கொடுத்து திருமணம் செய்யும் முறையுடன் பொருந்தி வருவதை ஆய்வின் வழி அறியமுடிகிறது.

பொலாக்குறிச்சி அமைப்பு பொது சமூக அமைப்பில் இருந்து மறைந்துவிட்டது. மலையாளி பழங்குடிகளிடம் ஒரு தலைமுறை வரை இருந்து தற்பொழுது அழிவு நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது.

வீட்டினைச் சுற்றி கல் அடுக்கும் வழக்கம் மலையாளிப் பழங்குடிகளிடம் காணப்படுகின்றது. சங்கப் பாடல்களில் காணப்படும் "அடுகல் பைந்தினை" என்னும் சொல்லோடு ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது ஜவ்வாது மலைப் பகுதிகள் வெவ்வேறுப் பகுதியில் கிடைக்கப்பெறும் தொல்லியல் எச்சங்கள் கல்வெட்டு, வழிபாட்டுமுறை, சடங்கு, நம்பிக்கை, பண்பாட்டுக் கூறுகளை விரிவான சமுதாய பண்பாட்டு மானிடவியல் பின்னணிகள் ஆராயப்பட வேண்டிய தேவையுள்ளது.

தமிழ்ச் சமூகத்தில் தொன்மையை ஆராயும்போது பழங்குடிச் சமூகங்களை இலக்கியம், தொல்லியல், சமயம் வாயிலாகவும் அறிய வேண்டியுள்ளது. கள ஆய்வின் மூலமாகவும் பல்வேறு சூழல்களில் ஆராய்ந்து அளித்த மானுடவியல் அறிஞர்கள் ஆய்வு முறையிலிருந்து புதிய நோக்கில் ஒருங்கிணைந்த சமுதாய பண்பாட்டு மானுடவியல் முறையிலான ஆய்வினைச் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதை மேற்கண்ட ஆய்வு முடிவுகளின் வழி கவனமுடன் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலைநாட்டு அறிஞர்களின் கோட்பாடுகளைக் கொண்டு நமது பண்பாட்டுச் சூழலில் இருந்து முழுமையான ஆய்வு அணுகுமுறையைத் தொடங்க வேண்டிய தேவை, காலத்தின் கட்டாயமாகிறது. மாறிவரும் பண்பாட்டு சிதைவுகளில் இருந்து நமது தொன்மையையும், தனித்துவத்தையும் உலகிற்கு ஆவணமாக எடுத்துரைக்க வேண்டியுள்ளதை இந்த ஆய்வு விளக்குகிறது.

தமிழ்ச்சமூகத்தின் தொன்மையை ஆராயும் பொழுது பழங்குடிச் சமூகங்களை இலக்கியம் தொல்லியல் சமயம் வாயிலாகவும் அறிய வேண்டியுள்ளது. தமிழ்ச்சூழலில் மானுடவியல் ஆய்வுகளுக்கு, குறிப்பாக பூர்வ குடிகள் பற்றிய ஆய்வுகளுக்கு இலக்கியம் தொல்லியல் இரண்டும் துணை செய்யும் இன்றியமையாத காலங்களாகும்.

தமிழகத்தில் பழங்குடிச் சமூகங்களில் வளர்ச்சி நிலைகள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் பதிவாகியிருப்பது பெரும் வியப்பளிக்கிறது என்கிறார் முனைவர் பக்தவத்சல பாரதி (திராவிட பழங்குடிகள் ஆய்வுகள் எனும் கட்டுரையில் இதனை குறிப்பிடுகிறார்).

இந்தியாவில் 200 ஆண்டுகளாக பழங்குடி பற்றிய தேடுதல் நடைபெற்று வருகிறது. வணிகர்கள், பயணிகள், மறைப்பணியாளர்கள், காலனி ஆட்சியாளர்கள், குடிமதிப்பு அதிகாரிகள், பிற நிர்வாகிகள், ஆய்வாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் தேடுதல் முயற்சி நடைபெற்று வருகிறது. தற்பொழுது அறிவார்ந்த நிலையில் அதுகுறித்த ஆவணப்படுத்துதல் நடைபெற்று வருகிறது.

இந்தியப் பழங்குடிகள் பற்றிய ஆய்வுபன்மயப்பட்டது. மேலைஅறிஞர்கள் முதல் இந்திய அறிஞர்கள் வரை ஏராளமானோர் எழுதியுள்ளனர். தமிழ்ச் சூழலில் நீலகிரி பழங்குடி, மேற்குத் தொடர்ச்சி பழங்குடி தவிர பிற பழங்குடி குறித்து மிகுதியான ஆய்வுகள் இல்லை. குறிப்பாக கிழக்குத் தொடர்ச்சி மலைப் பழங்குடிகள் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவாகவும் அரிதாகவும் செய்யப்பட்டுள்ளன.

மேலைநாட்டு ஆய்வு அறிஞர்களின் பார்வையில் நமக்குப் பல ஆய்வு நுட்பங்கள் கிடைத்து இருப்பினும். நமது சமூகங்களின் உட்பொருளை வெளிப்படுத்த நாம் சில அகவயமான ஆய்வு முறைகளை வகுத்து ஆராய வேண்டியது அவசியமாகும். சங்க இலக்கியத்திற்கும் இன்றைய சமகால தமிழகப் பழங்குடிகளின் வாழ்வுக்கும் உள்ள தொடர்ச்சியையும் வேறுபாடுகளையும் நாம் நுட்பமாக அறிய வேண்டும். சங்க இலக்கியம் பற்றிய போதுமான புரிதல் அற்றவர்கள் மேலைநாட்டு அறிஞர்கள். அவர்கள் சமகால சமூக அசைவியக்கத்தை மட்டுமே ஆராய்ந்திருக்கிறார்கள். அது ஒரு வகையான புரிதலை மட்டுமே தருகிறது. ஆனால் பழங்குடிகளைப் பொருத்தமட்டில் நம்முடைய தேவைக்கேற்ற ஆய்வுப் போக்குகளை நாம்தான் உருவாக்க வேண்டும். ஒருங்கிணைந்த இலக்கியம், தொல்லியல், மானுடவியல் அடிப்படையில் சமுதாய பண்பாட்டு மானிடவியல் அடிப்படையிலான ஆய்விற்கு முக்கியத்துவம் தருவது அவசியமாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. பக்தவத்சல பாரதி, 2017 தமிழகப் பழங்குடிகள், மூன்றாம் பதிப்பு (ப.70).
2. சு. சக்திவேல். நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், ஏழாம் பதிப்பு 2006 (ப.22).
3. அகநானூறு, கோவிலூர் மடாலயம் பதிப்பகம், 2003.
4. நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சா நூல்நிலையம், மூன்றாம் பதிப்பு - 2013.
5. பத்துபாட்டு, மலைப்படுகடாம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2016.
6. வன உயிர் பதுகாப்புச் சட்டம் (wildlife protection act, 1972)
7. ந.சி கந்தையா, தென்னிந்திய குடிகளும் குலங்களும் சந்தியா பதிப்பகம் 1999 மறுபதிப்பு - 2015.
8. கோ. சதிஷ் 2016, பண்டைய தமிழ் பனுவல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. ரே. கோவிந்தராஜ் மலையாளிப் பழங் குடிகள் (ஜவ்வாதுமலை மலையாளிகள் வாழ்வியல்), வாகைப் பதிப்பகம், முதல்பதிப்பு - 2021. ப-38,39,41,42
10. ஜே. ஆர். லட்சுமி, ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடியின மக்கள் வாழ்வும் மொழியும் Kindle E & book மதன் மோனிகா பதிப்பகம். (இணையப் புத்தகம்).
11. சங்கரன் கி.ரா, 2016 இரும்புகாலமும் சங்க காலமும், NCBH, சென்னை.
12. முனைவர். பக்தவத்சலபாரதி 2014 இலக்கிய மானிடவியல், அடையாளம் பதிப்பகம்.
13. தே. லூர்து, 2006, நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடு.
14. இந்திய நிலவியல் ஆய்வுக் கழக, 1872 "Geological Features of the South Mahratta Country and Adjacent Districts''